www.tamilarangam.net

Paya

பங்குனி-வைகாசி

1990

# அஆஇ

AANAA AAWANNAA IENAA

இந்த மண்ணின் விடுதலை விதையாய்
எனது குருதியை துளித்துளியாக
நான் சிந்திச் சிதறுவேன்
சிறையில் இருப்பினும்
நான் அடிமை அல்ல
நான் கூறிடப் பட்டால்
அல்லது அரியப் பட்டால்
மீண்டும் மீண்டும் அலையென எழுவேன்.

தெலுங்குக் கவிஞன் செரபண்ட ராஜு

அரசியல் ஆய்வு இலக்கிய காலாண்டு இதழ்

Tijdschrift voor Tamils in Nederland

PAYA
87 RUE DE C...
92600 A...
SE...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்கதாரர்கள் தமது ஆக்கங்களுடன் தமது முகவரி முழுப் பெயர் போன்ற விபரங்களையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இவ் விபரங்கள் அற்ற ஆக்கமோ ஆய்வுகளோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஆக்கதாரர்களே அவர்களது ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அவையே எம்மை மேலும் உயர்த்தும் படிகளாகும்.

# அஆஇ

AANAA AAWANNAA IENAA

அரசியல் ஆய்வு இலக்கிய ஏடு

பங்குனி-வைகாசி 1990 சுவடு 2

முகவரி AANAA AAWANNAA IENAA
Postbus 8523
8905 K M LEEUWARDEN
Nederland

சந்தா விபரம்

1 வருடம் தபாற்செலவு உட்பட

நெதர்லாந்து fl 10,-

ஏனைய ஐரோப்பிய நாடுகள் fl 15,-

எமது வங்கி கணக்கு இல

12.75.43.171
Rabobank
3354 LEEUWARDEN

மிடுக்கான இராணுவ உடுப்பும், தோட்டாக்களின் மாலையும், பாக்கெட்டுக்களில் எறிகுண்டுகளும், கையிலே இயந்திரத் துப்பாக்கி ஏ.கே.47ம் ஏந்தி, 'போராளி' என்ற பட்டங்கட்டிக் கொண்டிருந்த போதும், பகிரங்கமாக உரிமை பாராட்டிக் கொள்ள முடியாத அநீதியான ஒரு செயலைச் செய்யும்போது எவ்வளவு கோழையாகி விடுகிறான்!

புறநிலை, நோக்கு, உண்மை மீதான வேட்கை, நடுவு நிலையான ஆய்வு, நேர்மையான நிலைப்பாடுகள் ஆகிய இலட்சியத்தையே ஆயுதமாக ஏந்தி மனித உரிமை - நீதிக்காகப் போராடும்போது நிராயுதபாணியான ஒரு தாயும் எவ்வளவு வீரமிக்க போராளியாக உயர்ந்து நிற்கிறாள்!

-ரஜனி திரணகம கொலை.

நன்றி: புதிய ஜனநாயகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம் கருத்து

அருவி முதல் இதழ் வெளிவந்து இம் மூன்றுமாத இடைவெளியில் இதன் வாசகர்கள் எழுத்தாளர்கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராயங்களைத் தோற்றுவித்துள்ளது. ஒல்லாந்திலும், ஏனைய பல நாடுகளில் இருந்தும் எமக்கு வந்த வாசகர் கடிதங்கள் நேரடியாகச் சொல்லப்பட்ட அபிப்பிராயங்கள் எல்லாமே அருவியின் தொடர்ச்சியான வெளிக்கொணர்வையும், வளர்ச்சியையும் உறுதி செய்வதாகவேயுள்ளது. நம்பிக்கையோடு நாமும் தொடர்வோம் ஒரு சஞ்சிகையின் அவசியத்தையும் அதற்கான இன்றைய தேவையையும் நீங்களே வலியுறுத்தியுள்ளீர்கள் வெறும் சீரழிக்கலாச்சார இலக்கிய முயற்சிகளில் பலரும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அருவி போன்ற பத்திரிகைகள் இன்றைய அரசியல், ஆய்வு, இலக்கியப் பரப்பில் தமது நேர்மையான ஆரோக்கியமான பணிகளில் ஈடுபட வேண்டியது அவசியமானது. என்பதை பலரும் வரவேற்றிருப்பது எமது நோக்கங்களின் முதற்படியாகும்.

ஒரு பத்திரிகை. அதன் கருத்துக்கள் அதன்மீது வைக்கப்படும் விமர்சனங்கள் யாவும் சுதந்திரமாக. எந்தவித கட்டுப்பாடுகளோ, நெருக்குவாரங்களோ இல்லாமல் வைக்கப்பட வேண்டும். ஓர் எழுத்தாளன் தன் உணர்வுகளையும், உண்மைகளையும் சமூக மேன்மைக்காகவும் மனித நிமிர்விற்காகவும் வெளிக்கொணர வேண்டும் அரசியல் ஆய்வுகள் ஆக்க இலக்கிய முயற்சிகள் யாவும் மக்களுக்கே. அது வெறும் தனிமனிதத் தலைமைகளின் தவறுகளை மூடி மறைப்பதற்கோ, துதிபாடுவதற்கோ தாழ்ந்துவிடக் கூடாது. என்பதையும் விமர்சனக் கண்கொண்டு நோக்குவது நன்மை தரும்.

நாம் யாருக்கும் வழிகாட்டிகளாகவோ வக்காலத்து வாங்குபவர்களாகவோ இருக்கமுடியாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் எம்மைச் சுருக்கி அதற்காக வருத்தமுற்பட்டவர்கள் அல்ல இக் காலத்தின் தேவையை. அத்தேவைகளின் எதிர்பார்புகளை உணர்ந்து அவ்வுணர்வுகளோடுதான் எம் அபிப்பிராயங்களை வெளியிடுகிறோம். விமர்சன அடிப்படையில் எம் கருத்துக்களை முன்வைக்கிறோம். முன்வைப்போம். இதில் தனிப்பட்ட யாரையும் அவதூறு பேசுவதோ அல்லது புகழ்பாடுவதோ எமது நோக்கமல்ல.

எமது நேசத்துக்குரிய தாய்நாடும் அங்கு நடந்து கொண்டிருக்கும் போராட்டமும் பின் அடைவுகள், முன்னடைவுகள் - அவற்றினூடே பெற்ற அநுபவங்கள் பற்றியதான ஒரு ஆய்வு மிக அவசியமானது. அவற்றை நாம் மீளாய்வு செய்ய வேண்டியதும், படிப்பினைகள் பெற வேண்டியதும் அவசியமானதல்லவா?! அதனால்தான் நாம் மீண்டும் சொல்கிறோம் ஆயுதங்களால் மட்டும் அனைத்துக்கும் தீர்வு கிடைக்காது. அதிகாரம் மட்டும் விடுதலையாகிவிடாது. பேச்சுரிமை, எழுத்துரிமை மறுக்கப்பட்டு மௌனங்களாகப்புதையும் கருத்துக்கள் நடைமுறைகள் தடைச்சட்டங்களால் எவ்வளவு காலத்திற்குக் கட்டுப்படும். அப்படிக் கட்டுப்பட்டதாக வரலாறுகள் இல்லை.

நாம் எமது கண்களை மூடிக்கொண்டும், காதுகளையும் வாயையும் பொத்திக்கொண்டும், எமது உணர்வுகளை மரக்கவிட்டுக் கொண்டும் எவ்வளவு காலம் எதிலும் அக்கறை அற்றவர்களாக வாழ்ந்து மடியப்போகிறோம். அப்படியே மடிந்து விடுவதனால் என்ன பயன்? அப்படியே மறந்து வாழ வேண்டுமென்றுதான் பல 'மேதைகளும்' தொடர்பு சாதனங்களும் எமக்கு அறிவுறுத்துகின்றன. அரசியல் - கலை இலக்கியம் அறிவியல் விவகாரங்களில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் வெறும் 'வேலையற்ற - விசர்கள்' என்பது பலரது அபிப்பிராயம். ஆனால் தனது தேசத்தையும் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களையும் நேசிப்பவன், உண்மையான சுயநலமற்ற விடுதலையை விரும்புகின்றவன் நேர்மையான அரசியலில் ஈடுபடுகிறான். அதனால்தான் தனது உயிரைக்கூட விடுதலை விதையாய் கொடுத்து விடுகிறான். என்பது எமது கருத்து.

நாம் எம் காலத்தில், எமது தாய் நாட்டின் போராட்

www.tamilarangam.net

ட நடைமுறைகளில் பல தவறுகளை திருத்தாத வரைக்கும், அதிதீவிர ராணுவ முறைகளைக் கைவிடாத வரைக்கும், அன்னிய அரச சக்திகளிலும் அவர்களது இராணுவ உதவி நம்பிக்கைகளிலும் தங்கி நிற்கும் தவறுகளைத் திருத்தாத வரை சமூகத்தில் சாதி, மத இன, தேசப் பாகுபாடுகளில் சுய லாபம் தேடும் துரோகங்களைச் செய்யாதவரைக்கும் இறுதியாக மக்களை, மக்கள் மட்டுமே உந்து சக்திகள் அவர்களில் தங்கி நின்று போராடாதவரைக்கும் விடுதலை வென்றெடுக்கப்பட முடியுமா? இனியும் வெறும் சமரசங்களோ, அதிகாரப் பகிர்வுகளோ அரச இயந்திரத்தின் ஆள் மாற்றங்களோ எல்லாம் விடுதலை என்ற புனிதமான வரிக்குள் அடக்கிவிட முடியாது.

ஏதோ ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சண்டைகள் நடந்தது. வந்தவர்கள் எல்லோரும். மக்கள் பிரதிநிதிகள் நாம் என்றார்கள். அரசும் பல விடுதலை அமைப்புக்களும் ஒருவருக்கொருவரும், தமக்குத்தாமும் என்று பல பொது மக்களையும், இளைஞர்களையும் கொன்று குவித்தார்கள் ஆனால் எங்கள் வாழ்வில் மாற்றங்கள் எதுவுமில்லை. மேலும் ஒட்டாண்டிகளாக்கப்பட்டுள்ளோம். என்பது பொதுசனங்களது அபிப்பிராயமாக இருந்துவிட்டால்... அவர்களது வாழ்க்கை மேலும் சுமையாகும். அவர்களது அந்தக் கட்ட அடிமை வாழ்வுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது முடிவானால் மேலும் விடுதலைக்கான குரல்கள் மேலெழும் இதுவே வரலாறு. அடக்குமுறைகள் பேச்சு, எழுத்துச் சுதந்திரங்கள் மறுக்கப்படும் போதும் உண்மையான ஜனநாயக சக்திகளை ஒடுக்க முற்படும் போதும் அதற்கு எதிரான போராட்ட உணர்வுகள் தூண்டப்படும். அவ்வுணர்வுகளோடே ஆக்க இலக்கியங்கள் வெளிவரும். ஆக்க இலக்கியம் என்பது காலத்தின் தேவையே அன்றி நிரந்தரமான இராமாயணங்கள் அல்ல. சமூகம் மாறிக்கொண்டு இருக்கிறது. அம்மாற்றத்தை உந்தித்தள்ள வேண்டியது கலை, இலக்கிய, அரசியல் பணிகளில் ஈடுபடுபவர்களின் கடமையாகும். அம்மாற்றத்தினை கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

— ஆசிரியகுழு —

www.tamilarangam.net

# மணமகள் ஆசிரியையாகிறாள்

— கல்யாணி —

எமது மண்ணில்
சொந்த பந்த
உறவுகள் தந்த
அடிமைப்பாடம்
இதயத்தை
ஆழமாகத் தீண்டியதால்
பொதுவாகத் துடைக்க
அகதியாகிய
அன்னிய மண்ணிலாவது
சுதந்திரக்காற்றை
சுவாசிக்க எண்ணியபோது
இங்கும்
எமது சமூகம்
தமது கலாசாரத்தை
கட்டவிழ்த்து விட்டது.

அன்று
பன்னிரண்டு வயதில்
இயற்கையின் நியதியால்
உடலில் உண்டான
இரத்தப் போக்கை
எவருக்கும் தெரியாமல்
மறைத்து விட்டேன்
ஆனால்
அம்மாவுக்கு மட்டும்.

அடுத்த வாரமே
நாள் குறிக்கப்பட்டது.
வாதாடினேன் அவர்களுடன்
அழுதேன் என்றான்
பலனில்லை
"வேள்வி ஆடு" போல்
யாவுமே நடந்தன.

அந்தக்காயம்
இன்னமும் மனதுள்
அதற்குள் மீண்டும்
ஆமாம்...
எனக்குத்திருமணம்
ஆனால்...
எனக்குத் தெரியாது.

அவர்கள்
பணம் பேய்ப்பிடித்த
அவனுக்கும்
எனக்கும்
நாளை மறு நாள்
அமைதியான இந்த மண்ணில்
ஆடம்பர மண்டபத்தில்
நாகரீகத் தாலிகட்டல்.

இன்று
நான் அழவில்லை
வாதட வில்லை
நாளை முடிவுடன்
நாளை மறு நாள்
அங்கே
அவனுக்கும் அவர்களுக்கும்
ஆசிரியையாகிறேன்
மணமகளாகவல்ல.

www.tamilarangam.net

# எதிர்கால ஐரோப்பாவில் தமிழர்கள்

உலகின் பல பாகங்களிலும் அரசியல் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம். இவற்றுள் கிழக்கு ஐரோப்பிய அரசியல் மாற்றங்கள் மிகத்துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கின்றது. மறுபுறத்தில் மேற்கு ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் மிகவும் வலிமையுள்ள ஒரு ஐரோப்பாவைக் கட்டி அமைப்பதில் மிக ஆர்வம் காட்டி வருவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆகவே எதிர்கால ஐரோப்பா அதாவது 1992ம் ஆண்டிற்குப் பின்னர் அமையப் போகும் ஐரோப்பா பற்றியும் அந்த ஐரோப்பாவில் பொதுவாக வெளிநாட்டவர்களின் நிலையும் குறிப்பாக தமிழர்களின் நிலையும் எப்படி இருக்கக்கூடும் என்பது பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகிறது.

அரசியல் தஞ்சம் கோருவோரை கட்டுப்படுத்துவதற்கும் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து ஐரோப்பாவுக்குள் வருகின்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வேண்டிய சட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் (நெதர்லாந்து) ஏனைய ஐரோப்பிய நாடுகளும் வகுத்துக் கொண்டு இருக்கின்றன. எனவே ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களின் எதிர்கால நிலை எப்படி அமையப் போகின்றது. எதிர்கால ஐரோப்பா எப்படி அமையப் போகிறது.

முதலில் நெதர்லாந்தில் தமிழர்கள் பற்றிய விடயங்களை எடுத்துக் கொண்டால் 1984 மார்கழி மாதமளவில் தமிழர்கள் உள்ளடக்கியதான விடயங்கள் வெளிவரத் தொடங்கின.

www.tamilarangam.net

ஆரம்பத்தில் தங்குமிட வசதிகள் பற்றிய பிரச்சினைகளும், தமிழர்களுக்குப் பாதகமான திட்டங்களும் தீட்டப்பட்டன.

1985 பங்குனிப் பகுதியில் தமிழர்களின் வரவு உச்சக்கட்டத்தை அடைந்து கிட்டத்தட்ட 3000 ஆகிய போது 45 தமிழர்கள் "அம்ஸ்ரடாம்" விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இச்செயல் சர்வதேச மன்னிப்புச் சபையினால் கண்டிக்கப்பட்டதுடன் அதன் வருடாந்த அறிக்கையிலும் இது மனித உரிமை மீறல் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழர்களுக்கு சமூக நலன்புரி உதவுதொகைப்பணம் மறுக்கப்பட்டு அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட முகாம்களில் BED, BATH, BREAD திட்டத்தின் கீழ் அவர்கள் விடப்பட்டனர். அத்துடன் தென்னிலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புடன் இருக்க முடியுமா என்பதை அறிவதற்கு விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியது. அந்த விசாரணைக்குழுவும் அதற்கு சாதகமாகவே அறிக்கை சமர்ப்பித்தது. நெதர்லாந்து அரசின் தமிழர்களுக்குப் பாதகமான இக்கொள்கையினால் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. 1985 ஆடியில் கிழக்கு-மேற்கு ஜேர்மனிகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்த பிரகாரம் "பேர்லின்" ஊடாக ஐரோப்பாவினுள் தமிழர் வருவது தடை செய்யப்பட்டது.

தங்குமிட விடுதிகளில் ஏற்பட்ட வசதி குறைந்த வாழ்க்கை நிலை, பற்றாக்குறை (உ+ம் ஒரே அறையில் பலர்) கடும்குளிர், வேலை வாய்ப்பின்மை, பொழுது போக்கு வசதிக்குறைவு, தனிமைப்படுத்தப்பட்டமை, தமிழர்களுக்கான பிரத்தியேகமான இச்சட்ட திட்டங்கள் ஆகியன இவற்றுக்கு எதிர்ப்புகள் கிளம்பின. பாராளுமன்றம் போதிய வீட்

www.tamilarangam.net

குவசதி விரைவில் தேவையென முடிவு எடுத்தது. 1986 சித்திரையில் சில தமிழர் தங்குமிட விடுதிகளுக்கு தீ வைத்தனர். பொது ஸ்தாபனங்கள், ஒன்றிணைப்புக்குழுக்கள், கோவில்கள், தமிழர்களுக்கு வேறு இடங்களில் வீடு வழங்குவதற்கு பயன் தரக்கூடிய நடவடிக்கைகளை எடுத்ததுடன் தமிழர்களுக்கும் ஏனையோருக்கு வழங்குவது போன்ற சமூக உதவி தொகைப்பணம் வழங்கப்பட வேண்டுமென்றும் வாதாடின. டச்சு அரசு தென்னிலங்கையில் முகாம்களில் அமைக்க முடியுமா என ஆராய்ந்தது சில அரசியல் கட்சிகள் இந்தியா போன்ற இலங்கையின் அண்டை நாடுகளில் முகாம்கள் அமைக்க முடியுமா என குரல் எழுப்பின. ஐரோப்பிய மட்டத்தில் நாடுகள் கூட தமிழர்களை இலங்கைக்கு எப்படி திருப்பி அனுப்புவது என ஆலோசித்தன.

1986 பிற்பகுதியில் "அம்ஸ்ரடாம்" விமான நிலையத்தில் தங்குமிட நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந் நிலையம் இந்நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாத ஒரு பகுதியாக தொழிற்பட்டது. கிட்டத்தட்ட ஒரு தடுப்பு முகாம் போன்று பொலிஸ் காவலுடன் மாதக்கணக்காக கட்டடத்தினுள் பூட்டப்பட்ட நிலையில் வருபவர்கள் இருக்க வேண்டும். அரசியல் தஞ்ச விண்ணப்பம் இந்நாட்டிலிருந்து கோரலாம் என அனுமதிக்கப்படுபவர்கள் மட்டுமே நாட்டுக்குள் விடப்படுவார்கள் இந்த செயல் முறையானது வழக்கறிஞர்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் தலையீடின்றி அகதிகளாக வருபவர்களை விரைவில் திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கின்றது. அகதிகளாக வருபவர்களுக்கு வழக்கறிஞர்களது உதவியை நாட முடியுமென்பதும் பொதுவாகத் தெரிவதில்லை. இதனால் பல தமிழ் அகதிகள் பல சிரமங்களுக்குள்ளானதும் கண்கூடு இதுவே இன்றைய நிலைமை.

எதிர்கால ஐரோப்பா அதாவது 1992 ஐரோப்பா ஒரு பொருளாதார நோக்கில்

www.tamilarangam.net

அல்லது ஒரு வியாபார நோக்கில் உருவாக்கப்படுகின்றதென்ற ஒரு எண்ணத்தை இந்நாடுகளின் அரசாங்கங்கள் கொடுக்கின்றன. "ஸ்ராஸ்பேர்கில் கூடிய 12 மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் தங்களுக்கான பொதுவான வங்கியை (EUROPIAN MONATORY-UNITY) எவ்வளவு விரைவில் உருவாக்க முடியுமென ஆராய்ந்து வருகின்றனர் வெறும் தொழில் வளர்ச்சியை மட்டும் கொண்டதாகவன்றி மக்கள் நாடுகட்கிடையில் போக்குவரத்து செய்வதற்கும், வியாபாரம் செய்வதற்கும் உள்ள தடைகள் நீக்கப்பட்டு முழு ஐரோப்பிய மக்களது வாழ்வில் ஒரு ஏற்றத்தை ஏற்படுத்துவதாக தோற்றமளிக்கிறது. ஆயினும் இதன் மறுபுறத்தில் மக்கள் இந்த நாடுகளுக்குள் குடிபுகுதலில் உள்ள கட்டுப்பாடுகள் கொள்கைகள் ஆகியவற்றிலும் கறுப்பு இன மக்களின் நிலை பற்றியும் அகதிகளது நிலைபற்றியும் எத்தகைய பலாபலன்களை எதிர் நோக்க வேண்டி வரப் போகின்றதென்பதையும் நாம் சிந்தித்தேயாக வேண்டும். ஐரோப்பிய நாடுகளது சட்ட திட்டங்களை ஒருமைப்படுத்திப் பொதுவாக்குவதும், தேசிய இறைமையை அகற்றுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கு முன்னோடியாக பிரான்ஸ், மே.ஜேர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய நாடுகள் 1985 ஆனி மாதம் லக்சம்பேர்கில் உள்ள "செங்கன்"(SHENGEN) என்னும் இடத்தில் கூடினர். உடன்படிக்கை பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லையாயினும் இவ்வொப்பந்தம் வெளியாகியுள்ளது. இதன். முக்கிய அம்சங்கள்:

1. இந்த நாடுகளுக்கிடையேயுள்ள எல்லைகளைப் படிப்படியாக இல்லாமல் செய்தல்.
2. இந்நாடுகளிலுள்ள வெளிநாட்டவருக்கான சட்டங்களை பொதுவாக மாற்றியமைத்தல்

என்பனவாகும்

"செங்கன்" நாடுகள் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஐ. நா. சபையின் அகதிகள்

www.tamilarangam.net

சார்பான பிரதிநிதி (U.N.H.C.R) பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைக்காகப் போராடும் சட்ட அறிஞர்கள் ஆகியோரின் ஆலோசனையைப் பெறுவதற்கு "செங்கன்" நாடுகளின் குழு அனுமதி வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த "செங்கன்" உடன்படிக்கை நாடுகளில் உள்ள வெளிநாட்டவர்க்கு வேலை வாய்ப்பு இந் நாடுகளுக்கிடையே 'விசா' இன்றி சுலபமாகப் போய் வருவதற்கான வசதி போன்ற விடயங்கள் மேற்பார்வைக்கு சிறந்தது போல் தோற்றமளிப்பினும் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தவிர்ந்த ஏனையோர் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் உள்ளோர். இந் நாடுகளுக்குள் உட்பிரவேசிப்பதற்கு தீவிர கண்காணிப்பும், கட்டுப்பாடும் இருக்கும். உள் வருவதற்குத் தேவைப்படும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தாத விடத்து. உட்பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது. இதற்கு ஆதாரமாக 115 நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பாவுக்குள் வருவதற்கான "விசா" பரிசீலிக்கப்பட வேண்டுமென்றும் கடுமையான நிபந்தனைகளைக் கொண்டு வர வேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந் நாடுகளுக்கு இடையில் தீவிர கட்டுப்பாடும் தேடுதலும் இருக்கும். வெளி எல்லைகளில் இருந்து தொடர்பு கொள்ளக் கூடிய தானே இயங்கும் தகவல் நிலையம் (S.I.S செங்கன் தகவல் நிலையம்) ஒன்று உருவாக்கப்பட்டு பொலிசாரால் தேடப்படுபவர்களினதும் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களினதும் தகவல்கள் அனைத்தும் பேணப்பட்டு வருவதுடன் தகவல்கள் இந் நாடுகளுக்கிடையில் சுலபமாக பரிமாறக் கூடியதாகவும் அமையும். அரசியல் தஞ்சம் கோருபவர் "செங்கன்" நாடுகளில் ஒன்றில் ஒரு முறை மட்டுமே கோர முடியும்.

"செங்கன்" உடன்படிக்கையை நெதர்லாந்துப்

www.tamilarangam.net

பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் அடிப்படைக் காரணம் கிழக்கு - மேற்கு ஜேர்மனிக்கிடையிலான எல்லைக் கட்டுப்பாடு அகற்றப் படுவதனால் அகதிகளின் வருகையை எவ்விதத்தில் கட்டுப்படுத்தலாம் என்பதற்கான ஒரு சரியான திட்டத்தை மேற்கு ஜேர்மனி அரசு தீட்டிய பின்னரே இதனை ஏற்கலாமென கருத்துத் தெரிவித்துள்ளது.

மேற் கூறப்பட்ட கருத்துகளின்படி எதிர் காலத்தில் வெளிநாட்டவர்களுக்கான சட்டதிட்டங்கள் மூலமாக அகதிகள் அந் நாடு கோரியிருக்கும் தமிழர்களும், ஏனையோரும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும். எமக்கு பல்வேறு நம்பிக்கைகள் ஊட்டப்பட்டு இருப்பினும் அவற்றை நாம் எதிர் மறையாகவே நோக்க வேண்டியிருக்கிறது. எனவே தமிழர்களின் நிலையும் பெரும் பிரச்சினைக்குரியதாகவே எதிர் காலத்தில் அமையப் போகிறது.

- பத்மமனோகரன் -

# இன்றைய அரசியல் நிலைமைகள் -


இலங்கையில் இருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகளின் படி வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து இந்திய ராணுவம் வெளியேறிக் கொண்டு இருக்கிறது. இம் மாத இறுதிக்குள் முற்றாக இராணுவ வெளியேற்றம் நடந்து விடும் என்றே நம்பப் படுகின்றது. இந்திய ராணுவ வெளியேற்றமானது இலங்கையின் முழு மக்களினதும் மகிழ்ச்சிகரமான வரவேற்பைப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

இந்திய ராணுவ வருகையின் போது. தமிழ் மக்கள் கும்பங்கள் தோரணங்களுடன் வரவேற்றார்கள். பின்னர் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு இந்திய ராணுவ தலையீட்டுக்கெதிரான பல்வேறு விதமான எதிர்ப்புகள் காட்டப்பட்டது தான். இந்திய ராணுவம் வெளியேற்றத்திற்குக் காரணமாக அமைந்தது என்பது மறுப்பதற்கில்லை.

தற்போதைய சூழலில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமான பேச்சுவார்த்தைகள் இரகசியமாக முக்கியம் பெறுகிறது. இந்தியப்படைகள் வெளியேறிய பின் நாட்டு நிலை எப்படி அமையப் போகிறது என்பது ஒரு முக்கியமான விடயம்தான். (தொடர்ச்சி. பக்.28)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிறவெறிக்கு எதிரான ஆயுதப் போராட்டம் தொடரும்...

— நெல்சன் மண்டேலா —

நிறவெறி என்றாலே எம்மில் தென்னாபிரிக்கா என்ற எண்ணம் வந்துவிடுமளவிற்கு தென்னாபிரிக்க கறுப்பு இனமக்கள்மீது - அங்கு ஆட்சியிலிருக்கும் வெள்ளையர்களின் நிற ஒதுக்கல் கொள்கை பிரயோகிப்பது அறியப்பட்ட ஒன்றே - உலகில் பல்வேறு நாடுகளில் நிறவெறி, இனவெறி, சாதிவெறி போன்ற வெறிகள் தூண்டப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆயினும் இவற்றையெல்லாம் விஞ்சியதாக தென்னாபிரிக்க அரசின் அப்பாட்டைந் "(Apartheid) கொள்கை அமைந்துள்ளது. அப்பாட்டைந்" என்ற சொல் நெதர்லாந்து மொழியிலிருந்து பெறப்பட்டதாயினும் ஏனைய எல்லா மொழிகளிலும் இதுவே உபயோகிக்கப்படுகிறது. இச் சொல்லின் பிரதான அம்சங்களை கருத்தில் கொண்டால் பெரும்பான்மையினரான கறுப்பு இன மக்களை நிற அடிப்படையில் ஒதுக்கி வைத்தலாகும். இவர்கள் புறம்போக்கு நிலங்களில் ஒறிப்பாத எந்த உபயோகமற்றதும், வேலைவாய்ப்புகளோ, தொழிற்சாலைகளோ அற்ற மிகவும் பின்தங்கிய இடங்களில் குடி அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

சிறுபான்மையான 4.5 மில்லியன் (45 லட்சம்) வெள்ளையர்கள் மட்டுமே இருந்தாலும் அவர்களே ஆட்சி அதிகாரத்தையும் வாக்குரிமையையும் பெற்றவர்கள், 25 மில்லியன் (250 லட்சம்) தொகையினரான கறுப்பு இனமக்கள் எந்த அதிகாரமற்றவர்களாகவும் அடக்கப்பட்டவர்களாகவும் உள்ளார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கறுப்பு இன மக்களின் விடுதலையை முன்னிறுத்தி 1912ம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) உருவாக்கப்பட்டது. இது அகிம்சை வழிப் போராட்டங்களை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1921ம் ஆண்டு ஆயுதப்போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸ் கட்சியும் 1959ல் ANC யிலிருந்து ஆபிரிக்கர்கள் வெளியேறி Pan African Concures என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. கறுப்பு இனத்தவர்களை அடையாள அட்டை அறிமுகப்படுத்தலை எதிர்த்து 1960 ஆம் ஆண்டு பாஸ்குனியில் நடத்தப்பட்ட அமைதி ஊர்வலம் ஒன்றில் நிறவெறி அரசு துப்பாக்கிப் பிரயோகம் செய்து 60க்கும் மேற்பட்ட கறுப்பு இன மக்கள் சுட்டுக் கொன்றது. அதனைத்தொடர்ந்து அதே மாதக்கடைசியில் ANC, PAC ஆகிய அமைப்புக்களை அரசு தடை செய்தது. அதற்கு முன்னரே கம்யூனிஸ் கட்சி தடை செய்யப்பட்டு விட்டது. 1961ம் ஆண்டு நிறவெறிக்கொள்கை அடிப்படையில் அமைந்த 'குடியரசு' என சிறுபான்மை வெள்ளையினரால் பிரகடனப் படுத்தப்பட்டது.

அறுபதுகளில் நெல்சன் மண்டேலாவும், ANC யும் ஆயுதப் போராட்டம் கறுப்பு இன மக்களின் விடுதலைக்கு அவசியமென ஏற்றுக் கொண்டு அதன் நடைமுறை சார்ந்த ஏனைய வேலைகளில் ஈடுபட்டு ஏனைய ஆபிரிக்க நாடுகளில் தென்னாபிரிக்க போராட்டத்திற்கான ஆதரவைத்திரட்டினர்கள். இதனைத் தொடர்ந்து 1962 ம் ஆண்டு தனது 42 வது வயதில் நெல்சன் மண்டேலா ஆபிரிக்க நிறவெறி அரசின் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். 1964ல் ஏனைய ANC தலைவர்கள் கைது செய்யப்பட்டு மண்டேலாவுடன் அவர்களுக்கும் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்றுவரை கறுப்பு இன மக்கள் அமைதி, வன்முறை போராட்டங்களுடன் தம்மை இணைத்துப் போராடி வருகின்றனர். ஆயிரக்கணக்கானோர் தம் இன் உயிரை பலி கொடுத்துள்ளனர். போராட்டம் கூர்மையடைந்தும், உலகின் பல பாகங்களிலும் அதற்கான ஆதரவும் பெருகத்தொடங்கியது. பல நாடுகளில் அரசுக்கெதிரான பொருளாதாரத்தடை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் கறுப்பின மக்களுக்கான ஆதரவையும் பல் முற்போக்கு சக்திகள் வலியுறுத்தி நேரடியாக வழிப்போராட்டங்களையும் நடத்தின. இத்தாக்கங்களினால் தென்னாபிரிக்க நிறவெறி அரசின் பிரதிநிதி கிளார்க் நெல்சன் மண்டேலாவையும், ஏனைய சில அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து, ANC, PAC, கம்யூனிஸ் கட்சி ஆகிய அமைப்புகளின் தடைகளையும் நீக்கியுள்ளார். 27 வருடங்கள் சிறையிலிருந்த மண்டேலா 11.02.90 ல் விடுதலை செய்யப்பட்டார்.

நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்ததையிட்டு பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி ஹொல்லாந்து போன்ற அரசு

www.tamilarangam.net

கள் வெள்ளை இனவாத அரசைப்பாராட்டி. மேலும் ஆபிரிக்க இனவாத அரசுடன் தங்கள் தொடர்புகளைப்பலப்படுத்து வதற்கு தயார் கொள்கின்றன. ஆனால் அதேவேளை நெல்சன் மண்டேலா கறுப்பு இனமக்களுக்கு சமத்துவம் கிடைக்கும் வரை தொடர்ந்து ஆயுதப்போராட்டம் நடத்துவதற்கான மக்கள் ஆதரவையும் வெளிச்சக்திகளின் ஆதரவையும் கோரவேண்டுகோள் விடுத்துள்ளார்.

'கேப்டவுன்' என்னுமிடத்தில் பல்லட்சம் மக்களுக்கு மத்தியில் நெல்சன் மண்டேலா உரையாற்றும் போது 'வெள்ளையினத்தவர் கறுப்பு இனத்தவர் மீதோ கறுப்பு இனத்தவர் வெள்ளையினத்தவர் மீதோ ஆதிக்கம் செலுத்துவது தவறு'. என்பதை வலியுறுத்தியுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட பின்னர் 'எங்கள் போராட்டம் தற்போது கடுமையான போராட்டத்தின் ஆரம்பக்கட்டமாகவே அமைந்துள்ளது'. என்றும் இப்போராட்டத்திற்கு எனது உயிரையும் கொடுப்பதற்கு தயாராகவுள்ளேன்' என்றும் தெரிவித்துள்ளார்.

1964 ல் அவர் ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட போது இருந்தது போலவே தற்பொழுதும் நிலைமையுள்ளது. எனவே முன்போலவே நிறவெறிக்கு எதிரான போராட்டம் மிக அவசியமானதே.

ஆனாலும் அதிகார வர்க்கத்தின் படை நவீனமாக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளமையால் அடக்குமுறையின் பரிமாணம் முன்னையதைவிட அதிகமாகவே இருக்கும். இருந்தபோதும் தென்னாபிரிக்க மக்களும் மற்றும் உலகின் ஏனைய மக்களும் தென்னாபிரிக்காவினதும் ஏனைய நாடுகளினதும் போராட்ட அனுபவங்களிலிருந்தும் கறுப்பு இன மக்களினது வளர்ந்துவரும் ஆதரவும் பங்களிப்பும் விரைவில் தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

- மனோகரன் -

## வாசியுங்கள்!

**தூண்டில்**

மாத சஞ்சிகை, வருட சந்தா 48D M, தொடர்புகள் Sudasien Buro, Grosseheim str 58, 4600 Dortmund, WEST GERMANY

**புதுமை**

அரசியல் பொருளாதார கலை கலாசார காலாண்டிதழ். வருட சந்தா 12U S $ தொடர்புகள் Mainzer Land str147, 6000 Frankfurt, WEST GERMANY

**மனிதம்**

இருமாத இதழ்
ஒரு வருட சந்தா 18SFr, தொடர்புகள் Zentrum 5, Unterstutzungsvereien, Postfach 8542, 3001,Bern, SWITZERLAND

**அக்னி**

இருமாத சஞ்சிகை. வருட சந்தா 20DM, தொடர்புகள்- Agni, Allen str 17, 7144, Asperg, WEST GERMANY

www.tamilarangam.net

# இலக்கிய சந்திப்பு

மேற்கு ஜேர்மனியின் சஞ்சிகை ஆசிரியர்களும், வாசகர்களும் சந்தித்து, கருத்துகள் விமர்சனங்கள் அறிமுகங்களைச் செய்யும் இலக்கியச் சந்திப்பு ஆறுவது தடவையாக பேர்லின் நகரில் மார்கழி 22, 23, 24 ம் திகதிகளில் இடம் பெற்றது. இச்சந்திப்பில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் படைப்பாளிகள், வாசகர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் பலரும் கலந்து கொண்டு கருத்துக்களையும் முன்வைத்தனர். இச்சந்திப்பு ஐரோப்பாவில் சிதறுண்டு வாழும் எழுத்தாளர்கள் வாசகர்களிடையில் ஒரு நட்பையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கு ஒரு களமாக அமைந்துள்ளது.

மேற்கு ஜேர்மனியில் இருந்து வெளியாகும் தூண்டில், இந்தினி, தேனீ, புதுமை, அக்கினி ஆகிய சஞ்சிகைகளுடன் முதன் முறையாக நெதர்லாந்தில் இருந்து வெளியாகும் அஆகி நோர்வேயில் இருந்து வெளியாகும் சுவடுகள் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் வாசகர்களுடன் சஞ்சிகைகளின் விமர்சனங்களைக் கலந்துரையாடினார்கள். அஆகியின் முதல் இதழின் அறிமுகம் இங்கேயே செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'மொழியும் எழுத்தும்' பேராசிரியர் சிவசேகரம். லண்டன். 'தமிழரின் புலப் பெயர்வுகள்' வ. ஐ. ச. ஜெயபாலன். நோர்வே. 'சமதர்மக் கனவு அன்றும் இன்றும்' பேராசிரியர் சண்முகரத்தினம், நோர்வே. 'ஒல்லாந்தில் தமிழர்கள்' பத்மமனோகரன் ஒல்லாந்து. 'சிறுகதை இலக்கியம்' சிவேந்திரன். ஜேர்மனி. 'மலையகத் தமிழர்கள்' நித்தியானந்தன் ஜேர்மனி. 'மேடை அனுபவங்கள்' பாலேந்திரா. ஆனந்தராணி. லண்டன். 'பெண்ணிலை வாதம்' ரஞ்சினி உமா ஜேர்மனி. தயாநிதி நோர்வே. லக்ஷ்மி பிரான்ஸ், ஆகிய விடயங்களில் உரைகளும் கருத்துப் பரிமாறல்களும் இடம் பெற்றது.

மேற்கு ஜேர்மனியில் இசையமைக்கப்பட்ட பாடல்களும், கவிதா நிகழ்வும் (தேவன் டென்மார்க், இளவாலை விஜயேந்திரன் நோர்வே. சபின் குமார் ஜேர்மனி) இடம் பெற்றது. பேர்லின் இலக்கிய ஆவலர்கள் இச்சந்திப்பை மிக நன்றாக நடத்தியதுடன் அறிமுகத் தொகுப்பொன்றும் வெளியிட்டு இருந்தனர். தொடர்ந்து நடத்தப்பட்ட உரைகள் சம்பந்த

(தொடர்க. பக் 27)

www.tamilarangam.net

# அறைகூவல்

## - விபரம் -

துப்பாக்கிப் பற்களால் நிறைந்த பரம்பரை. மாறி மாறி
ஆளப்படும் இனத்தையே அழித்துக் குதறுகிறது.
எங்கள் மண்ணின் மாறாத இரத்தவாடைக் காற்று
எம் மரத்த நெஞ்சின் நளர்ந்த வசந்தமாகிறது.
ஓயாத தீரக்கூத்தின் வக்கிரம் கொண்ட மரண ஒலி
சலிப்படைந்த மக்கள் காதுச் சோணைகளில் ரீங்காரமாகிறது.
ஆழ்ந்த கொடுமை இருளின் நிறங்களோ. நிஜமாக
அழுது பிதுங்கிய கண்களுக்கு அழகாகக் காட்சி தருகிறது;
வலுவற்ற பயந்த மெய்கள் பலாத்கார மரண வாழ்வுக்கு
மெய்யாகவே மனித பெறுமதியற்ற சவமாகிறது..

இது வரை நாங்கள் எங்களையே...
இது வரை நாங்கள் எங்கள் புலன்களையே...
இது வரை நாங்கள் எங்கள் புலங்களையே...

நார்பரியத்தின் லட்சணங்களால்
ஜீரணிக்க முடியாத திணறல் எமக்கு
நிரந்தர யதார்த்தமாகிவிட்டது. இருந்தும்
ஒரு யதார்த்தம்

எதிர் வழியில் எங்கள் புலன்களுக்கு
எதிர் வழியில் எங்கள் புலங்களுக்கு
என்றுமே அறைகூவுகிறது.

**சந்தா அனுப்பி ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி**
**மேலும் தெரிந்தவர்களிடம் அறிமுகம் செய்யுங்கள்.**
**சந்தா பணத்தை எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பியபின்**
**உங்கள் முகவரிகளை எமக்குத் தெரியப் படுத்துங்கள்.**

- 'அ ஆதி' -

www.tamilarangam.net

# உங்கள் கருத்துக்கள்

• அ.ஆ.இ என்ற முதல் இதழ் என் கைக்குக் கிடைத்தது. இதை அறிமுகம் செய்த ஆசிரிய குழுவிற்கு என் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கிறேன். நேரம் பொன்னானது என்பதற்கிணங்க தங்களது நேரத்தை நல்ல தொரு விடயத்தில் செலவிடுகிறீர்கள்.

— புஷ்பா - நெதர்லாந்து —

• முதல் இதழ் நன்றாகவுள்ளது. 'எம் கருத்திலேயும்' உங்களது சமூகவியல் பார்வையைத் தெளிவு படுத்தியுள்ளீர்கள். 'எமது தேடுதல்களும் எழுத்தாக்கமும்' வாசகர்கள், எழுத்தாளர்களின் பங்கினை வலியுறுத்துகின்றது. அதில் குறிப்பிட்ட 'பாலிக்குள் போடவேண்டியவர்களை போடாமல் விட்டால் எப்படி?' என்ற கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். இதுதான் உண்மையும் கூட. தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள்.

— தயாநிதி - நோர்வே —

• சஞ்சிகை அதன் வளர்ச்சிக்குரிய தரத்தைச் சுட்டிக்காட்டுகிறது. முதல் சஞ்சிகையில் பயனுள்ள விடயங்களை கவனிக்க முடிந்தது. 'கருத்துப் பரப்பு' ஒரு தேவையான தொன்றுதான். கட்டுரைகளும் கவிதைகளும் இன்றைய நிலைமையை ஒட்டியவையே.. சஞ்சிகையை இங்குள்ள நூலகத்தில் கொடுத்துள்ளேன். வாசித்த பலர் நல்ல அபிப்பிராயத்தை என்னிடம் தெரிவித்தார்கள்.

— மைதன். கனடா —

• பிரதியில் இருக்கும் ஆக்கங்களும் அமைப்பு முறையும் நன்றாகவுள்ளது. 'எமது தேடுதல்களும் எழுத்தாக்கமும்' என்ற விடயம் நாம் வாசிப்பதுடன் மட்டுமல்லாது பல விடயங்களில் சிந்தித்து செயற்பட வேண்டுமென்றும் இலக்கியத்தினூடாக ஒரு சமூக வளர்ச்சியை ஏற்படுத்த முயலவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றுமென்றும் எடுத்துக்காட்டியுள்ளது — க.னேஸ். கனடா —

• உங்கள் முயற்சிகள் யாவுக்கும் எனது கரம் சேர்ந்த கைதட்டுக்களுடன் கரம் பதிந்த படைப்புகளும். எமது கருத்துக்களை வெளிப்படுத்த என்னைப் போன்ற தமிழர்களுக்கு இச் சஞ்சிகை ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். இது மேல் மேலும் வளர்ந்து எமது அறிவின் ஊற்றைப் பெருக்கிட வேண்டுகிறேன்.

— சிவா. நெதர்லாந்து —

• அன்பான ஆசிரியருக்கு அ.த.இ சஞ்சிகை தொடர்பாக "மனிதம்" சஞ்சிகையில், அறிமுகம் பகுதியில் கண்ணுற்றேன் வாழ்த்துக்கள். மேற்படி இச்சஞ்சிகையின் எம்முகவரிக்கு தயவு செய்து அனுப்புவீர்களாயின் தங்கள் சஞ்சிகை தொடர்பாக நாங்களும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். எங்கள் மலையகம் தொடர்பாக தங்கள் சஞ்சிகைக்கு வாசகங்களை அனுப்பவும் வாய்ப்பு ஏற்படலாம். ஆசிரியரே தயவு செய்து தங்கள் ஆக்கங்களை நாங்களும் கண்டு கொள்ளலாமா?

— ஏ. ஜெயராசா, இலங்கை —

---

இன்றைய... (28ம் பக்கத் தொடர்)

புலிகள் இலங்கை அரசுடன் மாகாண சபையைக் கலைக்க வேண்டுமென்று கேட்டுள்ளனர். ஆனால் அரசு மாகாண சபைக் கலைக்க முடியாவிட்டாலும் கூட அவர்களால் தொடர்ந்து இயங்க முடியாது என்பது கண்கூடு. ஆனாலும் மாகாண அரசு அதிகாரப் பரவலாக்கல் பற்றி வாய் ஓயாது கத்திக்கொண்டேயிருக்கிறது. இந்திய ஆதரவுக் குழுக்களினதும், மாகாண அரசினதும் கதி என்ன! மீண்டும் தமிழகம் சரணாலயமா? தமிழக முதல்வர் கருணாநிதி இராஜதந்திரப் பேச்சுக்களும் 'ஒற்றுமைப் பேச்சுக்களும் நடத்துவதாக அறிகிறோம்.

தொடர்ந்து சில பகுதிகளில் E.P.R.L.F, E.N.D.L.F போன்றவை கொள்ளையிடல் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் செய்திகள் வருகின்றன. இது ஒரு புறமிருக்க தெற்கில் பிரேமதாச யு.என்.பி அரசு மிகக் கொடூரமான சித்திரவதை கொலை வெறியை J.V.P சந்தேக நபர்கள் மீது தொடர்கிறது. முகங்கள் சிதைக்கப்பட்ட பல இளைஞர்களின் உடல்கள் தெருக்களில் வீசப்படுகிறது.

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் வரி அறவிடுவதை அரசு எதிர்க்காமலும் இந்திய ராணுவம் வெளியேறிய பின் பொலிஸ் நிலையங்களை திறக்க அனுமதிப்போம் என்று கூறி ஒருவருக்கொருவர் நட்புடன் நடந்து கொள்கிறார்கள்.

— யாதவன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோமாரி நோய்

விபரம்

இந்தியாவில் இருந்து வந்த ஆடு ஒன்று இலங்கையின் வடபகுதி தமிழர் பிரதேசம் காட்டினில் சென்று கொண்டிருந்த போது, இதை அப்பிரதேசத்தின் சில ஆடுகள் கண்டு விட்டன. உடனே அவைகள் தெம்புகளி நிலத்தில் இருந்து இந்திய ஆட்டுடன் சண்டைக்கு வந்தன. சில தங்கள் கத்தலினாலும், அதனருகே சென்று சரசமாடியதாலும் தமது வரவேற்பை தெரியப்படுத்தின. இந்திய ஆடு, தன்னிடம் பகைமை காட்ட வந்த ஆடுகளிடம், "என்னிடம் சண்டைக்கு நீங்கள் வந்தால் இறந்துவிடுவீர்கள்" என்றது. சண்டைக்கு வந்த ஆடுகள் திரும்பிவிட்டன. ஏனைய வடபகுதி ஆடுகள் அதனோடு சேர்ந்து மேய்ந்தும், உறவு கொண்டும் சுகமும் ஆகிவிட்டது. மாலை வந்ததும் இந்திய ஆட்டுடன் முகாம் பட்டிகளில் சென்று இரவைக் கழித்தன.

மறுநாள், முதல்நாள் சென்ற இடத்திற்கு இந்திய ஆடு சென்றது. அங்கே கொம்பு நீட்டி சண்டைக்கு வந்த ஆடுகள் இன்றும் இதனுடன் மோத வந்தன. இந்திய ஆடு "நான் ஒரு உண்மையைக் கூறப்போகிறேன் நீங்கள் என்னுடன் சண்டை இட்டாலும் இடாவிட்டாலும், நீங்கள் இறப்பது உறுதி" என்றது. மற்றைய ஆடுகள் வியப்போடு அதனைப் பார்த்தன. மேலும் இந்திய ஆடு கூறியது "என்னுடன் சேர்ந்த உங்கள் இனத்தவர்கள் இறந்துவிட்டார்கள். அதற்கு நாங்கள் பரப்பிய கோமாரி என்னும் நோய்தான் காரணம். அதுமாத்திரமல்ல, இந்த நோய் காரணமாக தமிழ் பிரதேசத்திலுள்ள உங்கள் இனத்தில் பெரும்பாலானவர்களை அழித்துவிட்டோம். மிக விரைவில் அந்த நோயால் நீங்களும் இறப்பது உறுதி. நாங்கள் கோமாரி பரப்ப வந்த விடயம் முடிந்துவிட்டது. நோய் பரப்ப வந்தோம், பரப்பிவிட்டோம் திரும்பிச் செல்கிறோம். ஆனாலும் சிலரை விட்டுச் செல்வோம், நாங்கள் அனைவரும் இந்தியா செல்லும் நிலை ஏற்பட்டாலும் உங்கள் இனத்தவரில் சிலருக்கு இதனை (கோமாரியை) செலுத்தியே செல்வோம். அவர்கள் எங்கள் நோயைப் பரப்பி உங்களை அழிவுக்கே கொண்டு வருவார்கள்' எனக் கூறி தனது முகாமிற்குத் திரும்பிச் சென்றது.

www.tamilarangam.net



# கருத்துப் பரப்பு



## பெண்களும் வாழ்க்கையும்

- கல்யாணி -

உலக சனத்தொகையில் அதிக எண்ணிக்கையைக் கொண்டதாகக் கருதப்படும் பெண்களின் வாழ்வு அவல நிலையில் காணப்படுவது கேள்விக்குரியதே. இப் பெண்ணடிமைத்தனம் மனிதன் தோன்றிய காலம் தொட்டே ஆரம்பமாகியதல்ல. இடையிட்டே தோற்றுவிக்கப் பட்டதாக சான்றுகள் தெரிவிக்கின்றன.

மனிதன் தோன்றிய ஆரம்ப காலப் பகுதியில் ஆண் பெண் இருபாலாரிடையேயும் சமமான வாழ்வு முறையும் அக்கால சமூக அமைப்பின் தலைமையை பெண்களே ஏற்றுள்ளதும் வரலாற்று உண்மையாகும். அக்காலப் பகுதியிலான வாழ்க்கைமுறை தான் தாய்வழிச் சமூகமென வழங்கப்படுகிறது.

காலப் போக்கில் முன்னேறி வந்த மனித வாழ்க்கை முறையில் உழைப்பு அதிகரித்து அதனால் உற்பத்தியும் அதிகரித்தது. தேவைக்கதிகமான சேமிப்பு ஏற்பட்டது. இங்கு அதிக உற்பத்தியைப் பெற்றவர்கள் ஆண்களே. காரணம் பெண்களால் அதிக நேர உற்பத்தியில் ஈடுபட முடியாமல் குழந்தைப் பராமரிப்பு, வீட்டு வேலைகள் என்பவற்றில் முழுமையாக ஈடுபட வேண்டியிருந்தது.

இந்நிலையில் அதிக உற்

www.tamilarangam.net

பத்தியைப் பெற்ற ஆண்களுக்கும் குறைந்த உற்பத்தியைப் பெற்ற பெண்களுக்கும் இடையில் சமமற்ற வாழ்வு முறை தோன்றியது.

தமது சேமிப்புக்கள் தமது வாரிசுகளுக்கே உரித்தாக வேண்டும் என்பதற்காக ஆண்கள் பெண்களை வாரிசு உற்பத்திக்கும், வாரிசுகளைப் பராமரிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தத் தொடங்கினர். இதற்காகத் தங்கள் வசதிகளுக்கு ஏற்ப சட்ட திட்டங்களைப் போட்டுக் கொண்டனர். பெண்களுக்கே உரியன என வரையறுக்கப்பட்டவைகளுக்காக பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் ஆரம்பமாகிய ஆதிக்கம் இன்று அரசுகளின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இப் பெண்ணடக்கு முறையை இன்று பலர் உணர்ந்து இதற்கெதிராக குரல் கொடுப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனினும் ஆரம்ப காலம் தொட்டு ஒரு பாலருக்கு சார்பாகவே ஏற்படுத்தப்பட்ட சடங்குகள் சம்பிரதாயங்கள், கலாச்சாரங்கள் என்பன இன்றும் பெண்ணடிமைத்தனத்தைப் பேணுவதில் முனைப்பாக இருப்பதையும் கண்டு கொள்ளலாம். உதாரணமாக பூப்புனித நீராட்டு விழா, தாலிகட்டலில் உள்ளடங்கிய திருமணச் சடங்குகள். கலாச்சாரம் என்றால் பெண்கள் சேலை அணிவதும் பூச்சூடுவதும் போன்றவற்றைக் குறிப்பிடலாம்

ஒரு பெண்ணின் உடற்கூற்றியல் ரீதியாக ஏற்படுகின்ற ஒரு செய்கை பெண் பெரியவள் ஆகிவிட்டாள் என்று விளம்பரம் செய்து கொண்டாடுகிறார்கள். அதன் பின் அவளை எவருடனும் பேசவோ, பழகவோ, விளையாடவோ, அனுமதிக்காமல் வீட்டுக்குள்ளேயே வைத்து வீட்டு வேலைகள். சமையல் வேலைகள் கற்றுக் கொடுக்கின்றனர். காரணம் அவள் இனிமேல் திருமணம் செய்து வேறு வீட்டிற்குப் போகப் போகிறவள் [அதாவது இதை விட ஒரு பெண் வேறு எதற்குமே தகுதியற்றவள் என்பது போல்] அங்கும் இதே வேலைகளை மிக அடக்கமாக, சரியாக, கோபப்படாமல் செய்ய வேண்டுமென்று அவனின் விருப்பத்திற்கும்

www.tamilarangam.net

மாறாக கட்டாயமாகப் பழக்கப் படுத்தி
றது. மிகவும் காவலாகவும் கண்டிப்
பாகவும் வளர்க்கின்றனர். இங்கே
அப்பெண்ணின் விருப்பமோ மனநி
லைப்பற்றியோ எப்பெற்றோரும் அக்
கறைப்படுவதில்லை. மாறாக இச்சமு
தாயத்தின் கண்டிப்புத்தனமாக கட்
டுப்பாடுகட்டுப்பட்டு வாழ்ந்து விட
வேண்டும். இல்லையேல் இவள் இச்
சமுதாயம் கெட்ட பெயர்களா
ல் கேவலப்படுத்தி விடும் என்று
மட்டுமே சிந்திக்கிறார்கள்.

இந்த முறையிலான கண்
டிப்பு, காவல் சில பெற்றோர்களால்
நடைமுறையில் இல்லையென்றா
லும் கூட அவர்களின் சிந்தனையும்
நோக்கமும் ஒன்றுதானே (அதாவது
வேறு வீட்டுக்கு வாழப் போகிறவள்
தானே)

அடுத்தபடியாக தாலி
கட்டல் திருமணமென்றால் என்ன?
தாலி என்றால் என்ன? இரண்டுக்
கும் என்ன சம்பந்தம்.

திருமணமென்றால் இரு
உள்ளங்களின் புரிந்துணர்வில்
ஒருவரை ஒருவர் விரும்பி தமக்
கென்று ஒரு வாழ்க்கையை ஏற்
படுத்திக் கொள்வதற்காக ஏற்பட்ட
ப்படி செய்கிற நடைவடிக்கை
யாகும்.

ஆனால் பெரும்பாலானதுமின்
கருத்து இதுவல்ல. இதுவும் ஒன்
று. இவர்களின் முக்கியமான கரு
த்து தம் பெண்ணுக்கு தாம் விரு
ம்பிய மாப்பிள்ளையை பணம்
கொடுத்து வாங்கி தம் வசதி
க்கும் மேலாகச் செலவு செய்து
எல்லோரையும் அழைத்து பெண்
ணைப் பட்டாலும், பவுணாலும் மூ
டி மறைத்து தலைகுனிந்த படியே
இருத்து வந்து மிகவும் அடக்க
மாக மாப்பிள்ளை அருகில் உட்
கார வைத்து விளங்காத பல
சடங்குகளின் பின் பெண்ணி
ன் கழுத்தில் மாப்பிள்ளையால்
20, 30 பவுணில் தாலிக்கொடி
அணிவிப்பதுதான் திருமணம் என்
றும் நினைக்கிறார்கள். இங்கேயு
ம் பெண்ணின் அபிப்பிராய
மோ விருப்பமோ இவர்களு
க்கு முக்கியமானதாகத் தெ
ரியவில்லை.

இத்தாலி கட்டலை ஏன்
செய்கிறார்களென்று அவதானிக்
கும் போது அவளின் அடிமை
மறை நிலையில் இருந்து அப்பெண்
ணிதும் விடுபட்டு விடக்கூடாது
என்று அடிமை நிலையைப் பாது
காத்துத்தான் இத்தாலி முறை
கையாளப்படுகிறது.

www.tamilarangam.net



பெண்களை ஆயுதங்கள் ஏந்துமாறு அழைத்து இயக்கங்களும் கோரிக்கை விடுக்கின்றன. ஆனால் தமிழ்ச்சமுதாயத்தில் பெண்களின் ஒடுக்குமுறை சார்ந்த தத்துவம், நடைமுறை பற்றிய எந்தவித ஆய்வும் மேற்கொள்ளவில்லை. தமிழ்ப் பெண்போராளிகளுடன் கலந்துரையாடும் பொழுது இது மேலும் தெளிவாகிறது. இயக்கங்களும் பெண்களின் நிலைபற்றிய விடயத்தில் ஒரு குழப்பமான நிலையே இருப்பதாக அவர்களே ஒத்துக் கொள்ளுகிறார்கள். இருப்பினும் கடைசியில் இக் குழப்பங்களையெல்லாம் தீர்த்து வைக்கும் வல்லமை படைத்தவர் தங்கள் தலைவர் என்ற நம்பிக்கை இருப்பதாக அவர்கள் கூறி முடிக்கின்றனர். இவர்களில் இப் பதிலைக் வருந்திய பெண்ணொருவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"பெண்கள் வெறுமனே ஆயுதம் தாங்கும் இயந்திரங்களாக மாறக்கூடாது. உங்கள் பங்கு அதைவிட மகத்தானது என்பதை மறந்து விடாதீர்கள்."

பெண்களையும் பட்டு, பவுண் ஆசைகள் பிடித்து விடுகின்றன. சிறுவயதிலேயே பெண்களுக்கு பட்டுச்சட்டை, பவுண்வளையல் என்று அவற்றின் மீது ஆசையை ஏற்படுத்தி வளர்ப்பதன் காரணத்தினாலே தான் ஆண்களை விட பெண்களுக்கு பட்டு பவுண்களில் ஆசை அதிகமாக காணப்படுகிறது. இதனைப்புரிந்த சமூகம் ஆரம்பகாலத்தில் மஞ்சள் நாலில் மஞ்சள் துண்டையும், மஞ்சள் நூலில் மூன்று முடிச்சையும் முடிந்து வந்த வழக்கத்தை மாற்றி இருபது, முப்பது பவுண்களில் கொடியையும், தாலியையும் செய்து பெண்களின் சிந்தனையையும் மழுங்கடித்து வருகின்றது.

பெண்களில் சிலராவது அடிமை இயல். இருந்து விடுபட்டது. போன்று தென்பட்டாலும் கூட சமுதாயத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை. வேலை செய்கின்ற அல்லது படிக்கின்ற பெண்கள் தம் படிப்பையோ அல்லது வேலையையோ முடித்து விடு திரும்பும் போது அவர்களுக்கென்று வீட்டு வேலைகள் காத்துக் கிடக்கின்றன. ஆனால் இதே போல் படிப்பையோ வேலையையோ முடித்து விடு திரும்பும் ஆண்களுக்கு வீட்டு வேலைகளும் இருப்பதில்லை. செய்ய வேண்டுமென்ற அக்கறையுமில்லை. இவை தவிர்க்க முடியாதவையல்ல. புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் வீட்டுக்குள்ளேயே வளர்க்கப்பட வேண்டும்.

செயற்படுத்தப்படல் வேண்டும். பெண்களும் இவை தம்முடைய கடமை என்றும், தலைவிதி என்றும் தமக்குள்ளேயே நொந்து கொண்டு தம் உடல் நலமையையும் கவனியாமல் மௌனமாகவே செய்து முடித்து விடுகின்றனர். இந்த மௌனமான செயற்பாடு கூட இந் நிலை தொடர்ந்தும் வளர்ந்து வருவதற்கு காரணமாகின்றது.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வளர்க்கும் போதே தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண் குழந்தையை நீ நன்கு படி, வீரமாக வா, பயமில்லாதவன் பலசாலி ஆம்பிள்ளை, எதிர்க்கக் கூடியவன் கெட்டிக்காரன் என்றும், பெண் குழந்தையை ஆண்பிள்ளை போல் கதையாதே, திருப்பியடிக்காதே அடக்கமாக இரு எதிர்த்துப் பேசாதே வெளியே போகாதே என்றும் சொல்லி வளர்க்கிறார்கள். இந்த வளர்ப்பு முறை அடிமைப்படுத்த ஆணும் அடிமையாக பெண்ணும் ஒரு வீட்டுக்குள்ளேயே வாழ வழி செய்கிறது. சிறு வயதில் சொல்கின்ற, போதிக்கின்ற கருத்துக்கள் மிக ஆழமாகப் பதியக் கூடியவை மாற்றுவது மிகவும் கடினம். இந்த முறையில் வளர்ந்த பிள்ளைகளின் மனோநிலையும் மாற்றக் கூடியவையல்ல.

பெண்களின் சிறுவயது வளர்ப்பு முறைகள் கூட இன்றும் தம் அடிமை நிலையை உணரவோ விடுபடவோ சிந்திக்கவோ முடியாமல் இருப்பதற்குக் காரணமாகிறது. இவற்றையும் மீறி ஒரு பெண் தன் அடிமை நிலையை உணர்ந்து தன் சிந்தனையில் செயல்பட முயலும் போது பெற்றோராலும், சமுதாயத்தாலும் மிகச் சாதுரியமாக அடக்கப்பட்டு மீண்டும் இருளுக்குள் தள்ளப்படுகின்றாள். அடக்கமில்லாதவள், அடங்காப்பிடாரி போன்ற இழிவான வார்த்தைகளால் கேவலப்படுத்தப்படுகிறாள் இப்பெயர்களைப் பெற விரும்பாமல் பெண்களும் தாமும் ஒரு நல்ல மகளாக, மனைவியாக, தாயாக வாழ்வதாக நினைத்து நினைத்து தாமும் தன் சந்ததிக்கும் அடிமை வாழ்க்கையை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றனர்.

ஆணும் பெண்ணும் எந்த நிலையிலும் குறைந்தவளல்ல. மனோதிடத்திலும், உடல் பலத்திலும் கூட நிகரானவளே. வளர்ப்பு முறைதான் இங்கும் வேறுபடுத்துகின்றது. பெண்ணும் ஆண் போல் பலமானவள் தான். ஆனால் பெண்களுக்குமட்டும் அழகுணர்வில் அக்கறையூட்டி, உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு, கொடியிடையாள், மெல்லிடையாள் போன்ற சொற்பிரயோகங்கள் மூலம் ஏற்கப்பட்டு உணவு குறைக்கப்பட்டு, பலம் இறவடைகிறது. இதனைப் புரியாத பெண்கள் தாம் இயற்கையிலேயே ஆண்களை விட பலம்

www.tamilarangam.net

குறைந்தவர்களோ என்று தீர்மானித்துவிடுகிறார்கள்.

வெளிவேலைகளில் கூட ஆண்களைப்போல்தான் பெண்களும் வேலை செய்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் ஆணைவிட அதிகமான உழைப்பில் கூட ஈடுபடுகிறார்கள். ஆனால் பெண்ணின் கூலி ஆணைவிட குறைவானதே. இதனை எந்தப் பெண்களும் எதிர்ப்பதேயில்லை. காரணம் தாம் ஆண்களைவிட பலம் குறைந்தவர்கள், கூடுதலான வேலையை எம்மால் செய்து இருக்க முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையே தான். இங்கே இவர்களின் உழைப்பும் சுரண்டப்பட்டு கூலியும் குறைக்கப்படுகிறது.

ஆண்களின் உழைப்பும் சுரண்டப்பட்டு கூலி குறைக்கப்படுவது உண்மைதான். இதைவிட மிக மோசமாகவே பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கெதிராக ஆண் தொழிலாளர்கள் மட்டும் குரல் கொடுப்பதைவிட ஆண் பெண் தொழிலாளிகள் இணைந்து ஒடுக்கப்படுகின்ற எல்லா இடங்களிலும் எதிர்ப்பதன் மூலம் ஓரளவாவது வெற்றி பெற முடியும்.

பெண்களுக்கெதிரான பாலியல் வன்செயல்கள் மிக மோசமானவை. பெண்கள் எப்போதும் தனியே செல்வதையோ, இரவு நேர வேலைகளில் ஈடுபடுவதையோ தவிர்க்க வேண்டியுள்ளது. காரணம் ஆண்கள் தம் விருப்பப்படி மட்டுமே ஒர் பெண்மீது பிரயோகிக்கின்ற பலாத்காரமானது அப்பெண்ணின் வாழ்க்கையை மிகவும் பாதிக்கின்றது. அதைவிட சமுதாயத்தின் இழிவான கண்ணோட்டத்தினை தாங்க முடியாமல் தற்கொலை செய்கின்ற முடிவுக்கும் பெண்களை இட்டுச் செல்கின்றது.

பாதிப்படைந்த பெண்களை ஆறுதல் வார்த்தைகளால் அரவணைப்பதை விட்டு, அதனை க வார்த்தைகளால் அவதூறு செய்கிறது. குற்றம் செய்த ஆண் மீது எந்த ஆட்சேபனையும் காட்டுவதில்லை. மாறாக அவன் ஆண்பிள்ளை அப்படித்தான் செய்வான் என்று மேலும் மேலும் இந்தகைய நிகழ்வுகளுக்கு தட்டிக் கொடுக்கிறது. இந்த கண்மூடித்தனமாக பக்க சார்பான முடிவுகள் மூலம் பெண்கள் தம் நிலை உணர்ந்தும் கூட செயல்படப் பயப்படுகிறார்கள் இன்நிலைமைகளில் இன்னும்

www.tamilarangam.net

நம் பெண்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

பெண்களின் வாழ்கையைப் பாதிப்பதில் சீதனமும் பெரும் பிரச்சினையே. மேலே கூறப்பட்ட விடங்களில் தம் பெண் பிள்ளைகளை வளர்ப்பதனால்தான் சீதன முறையும், தொகையும் தொடர்ந்து கொண்டும், அதிகரித்துக் கொண்டும் செல்கிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தம் ஆண், பெண் குழந்தைகளை எல்லா விடயங்களிலும் ஒரே முறையில் வேறுபாடின்றி வளர்க்க வேண்டும். ஆண் பிள்ளையைக் கல்வியில், தொழில் எந்த அளவிற்கு ஈடுபட வேண்டுமென்று எண்ணுகிறார்களோ. அதே போன்று பெண் பிள்ளைகளையும் படிப்பில், தொழில் ஈடுபடுத்த வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். அப் பெண் பெற்றோர்களிலோ அல்லது மற்றவர்களிலோ தங்கி வாழாமல் தானாக வரும் ஒரு நிலைக்கு வளரச் செய்ய வேண்டும். இத்தகைய நிலையில் எம் பெண்கள் இருப்பார்களேயானால் சீதனப் பிரச்சினைக்கும் நாமே முடிவு கண்டவர்களாகின்றோம்.

மனித எண்ணிக்கையில் அதிக தொகையில் இருக்கும் எம்மிடம் அதிக பொறுப்புக்கள் உள்ளன. இதனை வினையாக்காமல் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியால் நாமும் இணைந்து வாழ்க்கையை பயனுள்ளதாய் ஆக்க வேண்டும்.

பழைய கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எம்மால் தகர்க்கப்பட வேண்டும். பெண் ஒடுக்கு முறையும், அராஜகமும் சட்டத்தினால் மட்டும் தீர்த்து விடக்கூடியதல்ல, பெண்களின் விழிப்புணர்வினாலும் ஒன்றிணைவினாலும் சிறிது மாற்றத்தையாவது ஏற்படுத்தலாம்.

பெண்கள் மட்டும் பெண் அடிமை முறையை எதிர்ப்பதை விட ஆண்களும் பெண்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். சரியான தீர்வைத் தேடும் தேடலில் ஆண்களும் பெண்களும் தம்மை இணைத்துக் கொள்வது அவசியமானது.

இக்கட்டுரை, மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற 6வது இலக்கிய சந்திப்பின் போது, ஆக்கதாரரால் வாசிக்கப்பட்டது.

**இலக்கிய சந்திப்பு...**

மாண தொகுப்பொன்றினையும் வெளியிட்டுள்ளார்கள். அடுத்த சந்திப்பு சித்திரை 7ல் மேற்கு ஜேர்மனி நகரான 'கிறீபீல்டில்' நடைபெறுகிறது.

www.tamilarangam.net

[illegible]

விடுதலைப்புலிகள் இவ்விரண்டு முக்கிய அமைப்புக்களுடன் மோதலில் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. கிழக்கில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் காங்கிரசும், பாராளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈ.றோஸ் இயக்கமுமே இவ்விரு அமைப்புக்களாகும். முஸ்லிம் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி அமைக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பாராளுமன்ற அரசியல் கட்சியாகும். இது இந்திய ஆதரவுக் குழுக்கள் அங்கம் வகித்த மாகாண சபையுடன் நேரடியான ஆதரவையும் நல்லுறவையும் வைத்திருந்தது. முஸ்லிம் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதில் ஒவ்வொரு அமைப்புக்களும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பது முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

கடந்த தை மாத பிற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் சில விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருப்பதன் விளைவாக முஸ்லிம் காங்கிரஸ் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. சில முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் பலர் கைது செய்யப்பட்டும் உள்ளார்கள். இச்சம்பவங்களுக்கு எதிர்ப்புக் காட்டி நடத்திய கடையடைப்பையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து குலைப்பினர். விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதற்குத் தான் காரணமில்லையென்றும், தமக்கெனத் தனியான ஆயுதப்பிரிவு இல்லையென்றும் முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது. ஆயினும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இனால் இவர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட்டதாக இவ்வமைப்பு முன்னர் கூறியிருந்ததும் கவனத்திலெடுக்கப்பட வேண்டியதே.

ஈ.றோஸ் மீதான பல்வேறு தடைகள் புலிகளினால் இடப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. கடந்த வருட இறுதியில் ஈ.றோஸையும் துரோகிகள் பட்டியலில் அறிவித்தார்கள். இவ்வருட ஆரம்பத்தில் ஈ.றோஸ் தலைவர்கள் யாழ் வருவதை தடை செய்தமை, கூட்டங்கள் கூடாது தவிர்க்குமாறு வேண்டுகோள், ஈ.றோஸின் ஆயுதங்கள் புலிகளிடம் கையளிக்கப்பட்டமை. என்பவற்றைக் குறிப்பிடலாம். இதுவரை விடுதலைப்புலிகளினால் தடைவிதிக்கப்படாது நீண்ட காலம் தன்னைக் காப்பாற்றிய ஒரே இயக்கம் இதுவேயாகும். ஈ.றோஸ் தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை ஒரு விதத்தில் தவிர்த்துள்ளது என்பது தெரிகிறது. இந்திய உளவுப்படையான 'றோ'விற்கு சாதகமான சங்கரைத் தவிர்த்து புதிய நிருவாக அமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது புலிகள் ஈ.றோஸ் பாராளுமன்றப் பதவிகளை துறக்கத் தேவையில்லையென்று அறிவித்துக் கொடிகாட்டியுள்ளது.

இந்திய ஆதரவுக் குழுக்களுக்கும் அவை அங்கம் வகிக்கும் மாகாண அரசுக்கும் இது ஒரு நெருக்கடியான காலகட்டம். அவர்களால் இன்று வட கிழக்கில் நடமாட முடியாத நிலைமையுள்ளது.

(தொடர்ந. பக் 19)

www.tamilarangam.net

# தமிழ் மூலம் விஞ்ஞான உயர் கல்வி

## சில பிரச்சனைகள்

● சி. சிவசேகரம்

பல சமயங்களில் நியாயமான கேள்விகளும் ஐயங்களும் கருத்து முரண்பாடுகளும் எழுப்பப்படும்போது அவை பகைமையான நோக்கம் காரணமாக எழுப்பப்படுவதாகக் கருதப்படுகின்றன. விமர்சனங்களும் மாற்றுக் கண்ணோட்டங்களின் காரணங்களை விளங்கவும் விளக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளும் மாற்றுக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரமாகக் காணப்படுகின்றன. இக்கட்டுரையின் நோக்கம் தமிழில் விஞ்ஞான உயர்கல்வி தேவையா இல்லையா என்ற கேள்வியையோ சாத்தியமா இல்லையா என்ற கேள்வியையோ பற்றியது அல்ல. இவ்விஷயத்தில் என் நிலைப்பாடு தாய்மொழி மூலமான கல்வியின் சாத்தியப்பாட்டையும் அவசியத்தையும் வலியுறுத்தும் ஒன்று என்பதை மீண்டும் வலியுறுத்தி, தமிழ்மூலம் விஞ்ஞான உயர்கல்வி பற்றிய எதிர்பார்ப்புக்கள் ஏன் நிறைவேறவில்லை என்பதையும் சம்பந்தப்பட்ட சில அடிப்படையான பிரச்சனைகளையும் சிறிது அவதானிக்கலாம் என எண்ணுகிறேன். தீர்வுகள், இறுதி ஆராய்வில், நடைமுறை சார்ந்தன என்பதால் சில கருத்துக்களை மிகவும் மேலோட்டமாகவே வைப்பதுடன் நிறுத்திக்கொள்கிறேன்.

விஞ்ஞானம் சமுதாய நடைமுறை சார்ந்தது, மொழியும் அவ்வாறே. ஒரு மொழிமூலம் ஒரு விஞ்ஞானத் துறையில் அறிவைப் பெறவும் வளர்க்கவும் முடியுமா என்பது அந்த மொழிக்கும் அதன் மூலம் உணரவும் உணர்த்தவும் முயலும் விஷயங்கட்குமான தொடர்பைப் பொறுத்தது. ஒரு மொழி, ஒரு சமுதாயத் தேவையை நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்படும்போது, மாறவும் மாற்றத்தின் மூலம் வளரவும் செய்கிறது; அம் மாற்றம் மறுக்கப்படும்போது வளர்ச்சி மறுக்கப்படுகிறது. எனவே அச் சமுதாயத் தேவையை நிறைவேற்றும் சாத்தியக் கூறுகள் மறுக்கப்படுகின்றன; மொழி சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக நிற்கிறது; எனவே அது ஒதுக்கப்படும் வாய்ப்பு உருவாகிறது.

இலங்கையிலிருந்து வெளியாகும் 'தாயகம்' சஞ்சிகையிலிருந்து ஆக்கதாரரின் சில திருத்தங்களுடன் மறு பிரசுரம் செய்துள்ளோம்.

www.tamilarangam.net

தமிழின் தொன்மை அதன் பெருமைகளுள் ஒன்று. அதன் அடிப்படையான அமைப்பு மாறாமல் அது நீண்டகாலம் நிலைத்திருப்பது அதன் பெருமையே. எனினும், அது தமிழில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் மூடி மறைக்கவும் அடையாளங் காணப்பட்ட சகல மாற்றங்களையும் மொழியின்மீது திணிக்கப்பட்ட மாசுகள் என்று (பாசாங்காகவேனும்) ஒதுக்கமுனையவும் ஒரு ஆயுதமாகும் போது, அதுவே தமிழ்மொழியைப் பலவீனப்படுத்தவும் நாளடைவில் இறந்த மொழியாக்கவும் கருவியாகி விடுகிறது. தமிழ்மூலம் ஆற்றமுடியாததெதுவும் தமிழனுக்கு அவசியமில்லை என்ற விதமான தனித்தமிழ் வாதங்கள் இன்று எடுபடுவதில்லை. தமிழனுக்கு நவீன சமுதாயம் தேவை, தொழில் முறை தேவை, மருத்துவமும் தேவை, விஞ்ஞான அறிவு தேவை. எனவே தமிழ் இத் தேவைகட்கு எவ்வாறு ஈடுகொடுக்கும் என்பதே நம் முன்னுள்ள கேள்வி. தமிழில் விஞ்ஞான உயர்கல்வியின் வளர்ச்சியின் மந்தமான போக்கிற்கு தமிழில் விஞ்ஞானப் போதனை பற்றிய மொழிக் கொள்கையின் பங்கு முக்கியமானது என்பது என் கருத்து. ஆயினும் இக்கொள்கை சாத்தியமாக நமது சமுதாயச் சூழலே காரணமாக நின்றது என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழ் மூலம் விஞ்ஞானக் கல்வி பற்றிய தவறான அணுகுமுறையின் விளைவுகள் முற்றாக உணரப்படவில்லையெனினும், உணர்த்த இயலாதவையோ திருத்தமுடியாதவையோ அல்ல. அந்தத் தவறான அணுகுமுறையைச் சாத்தியமாக்கும் சூழல் அதிலும் அதிகளவு முக்கியமானது என்பதை மனத்திற் கொண்டு தமிழ்மூலம் விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சியையொட்டி வளர்ந்த பிரச்சனைகளைக் கவனிப்போம்.

தாய்மொழி மூலம் நவீன கல்விபற்றி இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி கொலனித்துவ விரோதப் போராட்டத்தின் வளர்ச்சியோடு ஒட்டியது. ஆயினும் தேசிய விடுதலைப் போராட்டங்களின் வளர்ச்சியையும் வெற்றிகளையும் அடுத்தே தாய்மொழி மூலம் நவீன கல்வி முக்கியத்துவம் பெற்றது. தேசிய சுதந்திரத்தின் பின்பே, தாய்மொழி மூலம் விஞ்ஞானத் துறையில் கல்வி பயிற்றுவது நடைமுறையில் முக்கியத்துவம் பெற்றது. விஞ்ஞானத்தைத் தமிழ் மூலம் கற்பிக்கவும் தமிழில் விஞ்ஞானக் கருத்துக்களைப் பரப்பவுமான முயற்சிகள் தேசிய சுதந்திரத்திற்கும் முற்பட்ட நாட்களிலேயே ஆரம்பித்தமையும் அத்தேவை அதற்கு முன்னரே வலியுறுத்தப்பட்டமையும் ஒரு சமுதாயத் தேவை சரியாக அடையாளங் காணப்பட்டதையே குறிக்கின்றன. தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்ட சூழலில், தாய்மொழி மூலம் கற்பிப்பதன் அவசியம் பற்றிய உற்சாகத்துக்கு ஈடான அளவில் தாய்மொழியின் சமகால நிலைக்கும் அது முகங்கொடுக்க முனையும் யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் முயற்சி அமையவில்லை.

www.tamilarangam.net

தமிழ் என்பது பல நூற்றாண்டுகள் முன்பு இலக்கண நூல்கள் வரையறுத்த ஒரு விறைப்பான மொழிவடிவம் எனும் கண்ணோட்டமும் தமிழின் வளர்ச்சியை அதன் தூய்மையின் பேரால் பழமை பேணும் போக்கின் வரையறைகட்குள் சாதிக்க முனையும் குறுகிய பார்வையும் தமிழ்க் கல்வித்துறையில் செலுத்திய ஆதிக்கம் தற்செயலானதல்ல. தமிழிற் கலைச்சொற்களைப் புனைவதில் 'தனித் தமிழ் வாதம்' கணிசமான காலத்திற்குச் செல்வாக்குப் பெற்றிருந்தது. பின்னைய காலங்களிலும் தீவிர மரபுவாதிகளது பிடி முற்றாக நீங்கியது என்று கூறமுடியாது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் விஞ்ஞானத் துறையில் கலைச்சொல்லாக்கம் சுயாதீனமாக நடந்ததால் மொழி பற்றிய அணுகுமுறையிலிருந்த வேறுபாடுகள், விஞ்ஞானத் தமிழ்ப் பிரயோகத்தை அன்றாட மொழி வழக்கினின்று பிரிந்த ஒரு மொழிக்குழாமாக அன்றி இரண்டு மொழிக் குழாங்களாகப் பிரியும் அபாயம் இன்னும் தொடர்கிறது. விஞ்ஞானக் கல்விக்குரிய மொழிப் பிரயோகம் ஒரு புதிய சமஸ்கிருதமாக (வடமொழி என்ற கருத்திலன்றிப், புனையப்பட்ட செயற்கைமொழி என்ற பொருளில்) உருவாகியதில் கலைச் சொற் பிரயோகத்தில் தனித் தமிழ் வாதத்தின் பங்கு பெரிதும் முக்கியமானது எனினும், முழுப் பழியும் அங்கேயே சுமத்தப்படல் தகாது.

நமது சமுதாயத்திற்கு நவீன விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் அயல் மொழி பேசுவோர் வாயிலாகவே வந்தன என்பதோடு அவற்றின் பாவனை இன்னுங் கூட ஆங்கிலம் பேசுவோர் ஆதிக்கத்திலேயே உள்ளது என்பதோடு அவை ஆங்கில மொழி மூலமே நடைமுறையில் செயற்படுத்தப்படுகின்றன. தமிழிற் கற்கப்படும் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலைச்சொற்கள் பரீட்சையில் தேறவும் பல்கலைக்கழகம் புகவும் கல்வி புகட்டவுமே முக்கியமாகப் பயன்படுகின்றன. விஞ்ஞான -தொழில் நுட்ப நடைமுறை தமிழ் மூலம் நிகழும் சில சூழ்நிலைகளில், அதிகாரபூர்வமான கலைச்சொற்களின் பிரயோகம் பெருமளவுக்கு ஆங்கிலச் சொற்களதும் வேறு அன்றாட வழக்கிலுள்ள சொற்களதும் பிரயோகத்துக்கு வழி விட்டு ஒதுங்கிவிடுகிறது.

தமிழ் மூலம் அடிப்படையான விஞ்ஞானக் கல்வி கற்போரும் தொழில் நடைமுறை தொடர்பான நிலைகளை அனுசரித்து காலக்கிரமத்தில் ஆங்கிலத்திற்கு மாறுவதை நாம் காணலாம். தமிழில் புத்தகங்கள் போதாமை, தமிழ் நாட்டுத் தமிழ் நூல்கட்கும், இலங்கை நூல்களுக்குமிடையிலான கலைச்சொல் வேறுபாடுகள், தமிழில் உயர் கல்வியும் ஆராய்ச்சியும் செய்வதில் நடைமுறைப் பிரச்சினைகள், சர்வதேச அரங்கில் விஞ்ஞானத் துறைகளின் அதிதுரிதமான வளர்ச்சி ஆகியன தமிழ் பேசும் விஞ்ஞானிகளை ஆங்கிலத்திலேயே தம் விஞ்ஞான நடைமுறைகளை வைத்திருக்குமாறு நிர்ப்பந்திக்கின்றன. தமிழ் மூலம் விஞ்ஞானக் கல்வி, நடைமுறையிற் பலவீனமான துறைகளை நடைமுறை சாராத ஒரு கிளைமொழி மூலம் கற்பிக்கும் நிலையிலேயே உள்ளது. தமிழ் மூலம்

www.tamilarangam.net

விஞ்ஞானக் கல்வி புலமை பெற்று வாழ்வதற்கு விஞ்ஞான நடைமுறை பரவலாவதும் வலிவு பெறுவதும் அவசியம்: நமது பின்தங்கிய சமுதாயச் சூழல், தமிழ் மூலம் விஞ்ஞான உயர்கல்வி சாத்தியமில்லை என்ற முடிவுக்கு நம்மை இட்டுச் செல்லலாம். ஆயினும் நாம் அவதானிக்க வேண்டிய உண்மை யாதெனின், நம் சமுதாயச் சூழலின் பின்தங்கிய நிலையினின்று விடுபடுவதும் விஞ்ஞான — தொழில் நுட்பக் கல்வியினதும் நடைமுறைகளினதும் பரவலாக்கலும் முற்றாகவே. பிரிக்க முடியாதவை: சமுதாயத்தின் நவீனமய்மாக்கலின்றி மொழியின் நவீனமயமாதல் சாத்தியமில்லை என்பதை நாம் மறுப்பதற்கில்லை: அவ்வாறாயின் தமிழ் மூலம் உயர் விஞ்ஞானக் கல்விக்கான முயற்சிகளும், விஞ்ஞானத்தைப் பரவலாக்கலும் புதிய கலைச்சொல்லாக்கமும் பயனற்றவையாகி விடுகின்றனவா? இல்லை. ஆயினும், தரப்பட்ட சமகால சமுதாயச் சூழலிலும் உலக நிலையிலும், தமிழை விஞ்ஞானத் துறையில் ஆங்கிலம் போன்ற உலக மொழியின் தரத்துக்கு உயர்த்த எடுக்கும் முயற்சிகள் பெரும் பயனளிக்கப் போவதில்லை, தமிழில் உயர் விஞ்ஞானக் கல்வி பற்றிய முயற்சிகள் சில அடிப்படையான 'எளிய' பிரச்சினைகள் பற்றிக் கூடிய அவதானம் செலுத்துவது 'பெருந்தொகையான புதிய கலைச் சொற்களின் புனைவை விட அதிகம் பயனுள்ளது. தமிழரிடையே விஞ்ஞானத்தினதும் விஞ்ஞான முறையினதும் பரவலாக்கலும், தமிழ்ப் பேசும் சமுதாயத்தின் பன்முக நவீனமயமாதலும் தமிழின் வளர்ச்சியினின்று பிரிக்க 'முடியாதவை,

தமிழ் மூலம் விஞ்ஞானக் கல்வி தொடர்பான கடந்த கால அணுகுமுறையில் உள்ள சில போக்குகளுடன் என் கருத்து முரண்பாடுகளைக் கூறலாமென நினைக்கிறேன். அயல் மொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்துவதில் சொற்கூறுகளை இயன்றவரை, கருத்தின் அடிப்படையில் மொழி மாற்றம் செய்வது எப்போதுமே நல்ல பயனை அளிப்பதில்லை. பல சமயங்களில் அயல்மொழிச் சொற்களை அப்படியே அல்லது வேறு சிக்கல்கள் ஏற்படா வண்ணம் தமிழ்ப்படுத்துவது பயனுள்ளது. (இது, தமிழிற் சொல்வளத்துக்கு ஊட்டம் அளிக்கும் எனினும், குருட்டுத்தனமாகப் பின்பற்றக் கூடிய ஒரு முறை அல்ல.)

அன்றாட மொழி வழக்கில் உள்ள அயல்மொழிச் சொற்கள் மட்டுமன்றிக் கொச்சை என்று கருதப்படும் பல பதங்களும் தமிழின் புதிய சொல்வளத்தின் ஒரு பகுதியாகுவதற்குக் கருதப்பட வேண்டும். பல சமயங்களில் ஒக்க, ஆனால் நுண்ணிய வேறுபாடுடைய, பொருட்களைக் குறிக்க இவ்வாறான புதிய சொற்கள் உதவக் கூடும். அன்றாட வழக்கில் ஏறத்தாழ ஒன்றையே குறிப்பினும் விஞ்ஞானப் பயன்பாட்டில் நுண்ணிய (ஆனால் புறக்கணிக்க முடியாத) வேறுபாடுகளை இவ்வாறான சொற்கள் தெளிவாக வேறுபடுத்தி உணர்த்த உதவலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அயல் மொழிகளது கலைச்சொல்லாக்க அனுபவம் கணிப்பில் எடுக்கப்பட வேண்டும். விஞ்ஞானத் துறைகள் பலவற்றில் இன்று முக்கியமான கலைச்சொற்கள் சர்வதேச அடிப்படையில் அமைகின்றன. இவற்றை விஞ்ஞானத்திற் பயன்படும் தமிழினின்று விலக்குவது அசாத்தியம். இவற்றைத் தமிழ்ப்படுத்தும் போது தமிழில் ஓசை வேறுபாடுகள் தொடர்பான பிரச்சினை எழுகிறது. தமிழில் k - g, t - d போன்ற ஓசை வேறுபாடுகளை எழுத்தில் தெளிவாகக் காட்டவேண்டிய தேவையை மேலும் நீண்ட காலத்திற்குத் தட்டிக்கழிக்க இயலாது. விஞ்ஞானத்திற் பயன்படும் சர்வதேசச் சொற்களைக் கையாளும் பிரச்சினைக்குத் தமிழிற் பாரிய சீர்திருத்தம் அவசியமாகலாம்.

அயல் மொழிச் சொற்கள், (விஞ்ஞானத்திற் பயன்படும்) தமிழில் புகுவது பற்றிய ஆட்சேபனைகளில் மிகவும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்று: இவ்வாறான சொற்களின் பெருந் தொகையிலான வருகை தமிழில் அயல்மொழிச் சொற்களைப் பெரும்பான்மையினவாக்கித் தமிழின் தன்மையே சிதைந்துவிடும் என்பது. இது மிகவும் தவறான ஒரு வாதம். தமிழில் ஏற்கெனவே உள்ள பல அயல்மொழிச் சொற்கள் தமிழினின்று வேறுபடுத்த முடியாதளவு தமிழில் ஒரு பகுதியாகிவிட்டன. புதியவையும் காலப்போக்கில் தமிழாகிவிடுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்று. அதைவிட முக்கியமாக, விஞ்ஞானத் துறையில் பயன்படும் சொற்கள் தொகையில் அதிகமாயினும் மொத்த நாளாந்தப் பிரயோகத்தில் மிகவும் குறைவானவை. இவற்றுட் பெருவாரியானவை மிக மிகக் குறைவாகவே பயன்படுவன. குறிப்பிட்ட விசேடமான துறைகளில் மிகச் சிலரால் விசேடமான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் பல உள்ளன. இவை மொழியின் விளிம்பில் நின்று இயங்கும் சொற்கள். சமுதாய வளர்ச்சிப் போக்கில் சில சமயம் இவை மூலவடிவிலோ அல்லது சுருக்கப்பட்ட வடிவிலோ மொழியுட் புகமுடியும். எனவே சர்வதேசச் சொற்களைத் தமிழில் அப்படியே புகுத்துவதும் அயல் மொழிச் சொற்களை ஏற்றவாறு தமிழில் புகுத்துவதும் மொழியில் உடனடியான விகாரம் எதையுமே புகுத்தப் போவது இல்லை. இச்சொற்களின் நிராகரிப்பு தமிழ் மூலம் விஞ்ஞானக் கல்வியை மேலும் சிரமமாக்குவதன் மூலம் தமிழில் கற்ற விஞ்ஞானிகளைத் தொடர்ந்தும் தமிழிற் செயற்பட முடியாது ஆங்கிலம் போன்ற மொழியை நோக்கி உந்துவது நிச்சயம்: ஏற்கெனவே, விஞ்ஞானிகட்கு ஆங்கில மொழியில் செயற்படுவதன் கவர்ச்சி அதிகமாக உள்ளது என்பதும் கவனத்திற்குரியது.

தமிழ் வசன அமைப்பும் விஞ்ஞானம் கணிதம் ஆகிய துறைகளில் உள்ள குறியீட்டு முறைகளும் முற்றாக உடன்பாடானவை அல்ல. ஆயினும் அவற்றை நாம் தயக்கமின்றிப் பயன்படுத்துகிறோம். அதே சமயம் கணிதம் விஞ்ஞானம் போன்ற துறை

www.tamilarangam.net

அனைதும், தொழில் நுட்பம், வணிகம் போன்ற துறைகளினதும் தேவைகளையொட்டி மொழியில் முறையான, திட்டமிட்ட மாற்றங்களைப் புகுத்துவது பற்றிச் சிந்திக்க மறுக்கிறோம். ஆங்கிலத்தின் மீது சமுதாயத்தின் நவீனமடைதல் பல மாற்றங்களைத் திணித்தது. அதன் விளைவாக ஆங்கிலமொழி வளரவும் வலிமை பெறவும் முடியுமாயிற்று. தமிழில் இவ்வாறான மாற்றங்கள் ஏற்படாமைக்கு ஒரு காரணம் தமிழ் பேசும் சமுதாயங்களில் ஏற்பட்ட நவீன விஞ்ஞான / தொழில் நுட்ப / வணிகத் தாக்கங்கள் அயல் ஆதிக்கத்தாலேயே புகுந்தமை எனலாம்.

கலைச்சொற்களின் பிரச்சனையில் விசேடமான சொற்களைவிட பரவலான உபயோகத்தில் உள்ள சொற்கள் முக்கியமானவை. விஞ்ஞானம் அளவையியலினதும் ( Logic ) மெய்யியலினதும் ( Philosophy ) ஆதாரமின்றி வளரமுடியாது. எனவே, அளவையியலிலும் மெய்யியலிலும் பரவலாகப் பயன்படும் கருதுகோள்களைக் ( Concepts ) குறிக்கும் சொற்கள் மிகவும் தெளிவாகவும் முரண்பாடின்றியும் நிர்ணயிக்கப்படுவதும் பிற அறிவியல் துறைகளிலும் உடன்பாடான முறையில் பயன்படுத்தப்படுவதும் மிகவும் பயனுள்ளது. கலைச்சொல்லாக்கத்தில், முக்கியமாகப் பரவலாகப் பயன்படும் சொற்களின் விடயத்தில், அளவையியல், மெய்யியல் ஆகியதுறைகள் மையமானவையாகக் கருதப்பட்டு அவற்றுடன் உடன்பாடான முறையிலும் துறைக்குத் துறை முரண்பாடற்ற முறையிலும் புதிய கலைச்சொற்கள் புனையப்படுவது விரும்பத்தக்கது.

சொற்களின் எளிமை, பேச்சு வழக்குடன் பொருந்தும் தன்மை, இலகுவில் பொருளை உணர்த்தக்கூடிய தன்மை ஆகியன பரவலாகப் பயன்படுத்தப்படும் சொற்களின் விடயத்தில் வலியுறுத்தப்படும் அதே சமயம் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பயன்படும் சொற்கள் ( குறிப்பாகப் பரவலான பயன்பாட்டுக்குரியன) முடிந்தவரை ஒத்து அமைவதும் மிகவும் அவசியம்.

இவையெல்லாம் மொழி நிர்மாணம் தொடர்பான விஷயங்களாயினும், தமிழ் பேசும் சமுதாயத்தின் நடைமுறை விஞ்ஞானத்துடன் பரிச்சயமில்லாமல் இருக்கும்வரை புதிய கலைச்சொற்கள் எல்லாம் வாழும் மொழிக்கு அந்நியமானவையாகத் தொடர்வது தவிர்க்க இயலாதது என்பது முக்கியமானது. தொழிலுக்கான விஞ்ஞானக் கல்வியும் விஞ்ஞானத் தகவல்களும் மட்டுமன்றி, விஞ்ஞான ரீதியான சிந்தனையும் அணுகுமுறையும் பரவலாக்கப்படுவதும் சமுதாயத்தின் நவீனமயமாதலும் பொருளாதார வளர்ச்சியும், தமிழின் நவீனமயமாதலுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதன. "பஞ்சபூதச் செயல்களின் நுட்பம்... சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு உண்டு", கைகால்கள் கட்டிப்போடப்பட்ட பழமைவாதத் தமிழ்மொழிக்கு அல்ல — கட்டவிழ்ந்த, சுதந்திரமான ஜீவனுள்ள தமிழ்மொழிக்கு நிச்சயமாக உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதினோராவது கட்டளை

சற்று நிதானமாய்
கனவு காணப் பழகிக்கொள்
கனவுகளிலாதல்
வீதிக்குப் போனவன்
உயிரோடு வீடு திரும்பலாம்
பெண்கள் கழுகுகளினால் குதறப்படாதிருக்கலாம்
பெற்ற புதல்வர்கள்
ஒருவரோடொருவர்
துப்பாக்கிகளால்
பேசாதிருக்கலாம்
வீட்டுக்கூரையில்
போர் விமானங்கள்
நடந்து திரியாதிருக்கலாம்
அல்லது
பிணக்குத் தீர்க்க வந்தவர்கள்
பிணங்களை விழுத்தாதிருக்கலாம்
இனிமேலாதல்
தயவு செய்து
கனவு காணப் பழகிக்கொள்

• மேற்கு ஜேர்மனியில் இடம் பெற்ற 6வது இலக்கிய சந்திப்பில், இளவாலை விஜேந்திரன், ஆதவன், ரஜீன்குமார் ஆகியோரால் நடத்தப்பட்ட கவிதா நிகழ்விலிருந்து.

# அக்கறையற்ற உனக்கு

சி. சிவசேகரம்

நடைபாதையில் குத்தாக நிற்கும்
கூரிய கண்ணாடிச் சில்லை
ஓரமாக ஒதுக்கி விடவோ
பஸ்ஸில் உன் கண்முன்னே நடக்கின்ற திருட்டை
பிடிக்கவோ மறிக்கவோ
தெருவைக் கடக்க முடியாமல் தடுமாறும் கிழவனுக்கு
துணையாக நடக்கவோ
தடுமாறிக் கீழே விழுகின்ற நோயாளிக் கிழவியை
தாங்கி நிற்கவோ
அரை இருளில் எவனோ
முரடனிடம் திணறுகிற பெண்ணை
மீட்கவோ
கூட்டத்தில் இழந்துபோய் அழுகின்ற குழந்தையை
யாரென்று கேட்கவோ
உனக்கு அவசியமில்லை.

ஏனென்றால்,
வெறுங்காலோ
பறிபோகும் பணமோ பண்டமோ உனதல்ல.
கிழவன் உன் அப்பனோ கிழவி உன் ஆத்தாளோ அல்ல,
திணறுகிற பெண் உனக்குத்
தங்கையோ மனைவியோ அல்ல,
குழந்தை உனதல்ல—
அனேகமாக.

அது போக,
அலுவலகத்துக்கோ, கடற்கரைக்கோ,
சீட்டாடவோ, சினிமாவுக்கோ,
ஓடுகிற உனக்கு
நேரந்தான் ஏது?
படித்தவன் நீ:
நடப்பது எதுவுமே
உனக்கல்ல என்று நன்றாக அறிவாய்.

அப்படியே ஒருநாள்
உனக்கேதான் ஏதேன் நடந்தாலும்
உன்னைக் காப்பதற்கு எவனோ மடையன் வேலையற்று
இல்லாமலா போவான்?

உலகம் தெரிந்தவன் நீ:
உன்நேரம் பொன்னானது.

நன்றி செப்பனிட்ட படிமங்கள்
(கவிதை தொகுப்பு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்